ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்த்ரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

பிராணிகளுள் ஓர் பிரிவினரான மனிதர்களுள் ஜாதிபேதமிருப்பது பெருங்கேடுகளுக்குக்காரணமென்று சிலர் பிரஸங்கமேடையில் வாய்கூசாமல் கூறிவருகிறார்கள். மனிதவர்க்கங்களைவிட வேறான பசு, பக்ஷி முதலிய பிராணிகளுள் ஜாதிபேதமிருப்பதுபோல் மானிடவர்க்கத்திலும் ஜாதிபேதமிருப்பதில் என்ன கெடுதி ஏற்பட்டுவிட்டதாகக் கருதுகிறார்களோ தெரியவில்லை. ஜாதிவித்தியாசம் எந்தப் பிராணிகளுள்ளுமிருக்கக்கூடாதென்று இவர்கள் நினைப்பார்களானால் இவர்கள் நினைத்துவிட்டதற்காகப் புலப்படும் ஜாதிபேதமும் அததற்குத்தக்க குணாதிகளும் இல்லாமற்போய்விடுமா? அதுபோலமனிதருள்ளும்அனுபவத்தில்நெடுநாளாய்த்தோன்றி வியவகரிக்கப்பட்டு வரும்இந்தவித்தியாஸம் சிலருக்குக்கெடுதல்போல் தோன்றி விட்டதற்காக அதையில்லாமலடிக்க முடியுமா? அதற்காக முயன்றாலும் பிரமாணத்தால் ஏற்பட்ட அது இல்லாமற் போய்விடுமா? "ஜாதிவித்தியாஸத்தை வேரோடு ஒழிக்கவேண்டுமெ" ன்று சிலர் கோருகிறபடி மானிடவர்க்கங்களெல்லாம் "ஒரே வகுப்பாயிருந்துவிட்டதாகக் கருதப்படுமாயின் வெள்ளையர்களின் அரசாங்க முறையைமாற்றி ஜனநாயக அரசாக்ஷியை ஸ்தாபிக்க முயலுவது எதற்காகவோ? வெள்ளைக்காரர்களும் மனிதர்கள்தானே. மனிதரென்ற வகுப்பினராகவேயுள்ள வெள்ளையர் அரசாக்ஷி முறையில் சில மாறுபாடு இருப்பதாகவெண்ணி அதைமாற்ற முயலுவதாகக் கருதினால் அப்பொழுது எவரிஷ்டப்படி நடத்தப்படும் அரசாக்ஷியை ஒப்புக்கொள்ளலாம். சுயமரியாதைக்காரர் இஷ்டப்படி நடக்கலாமா? சீர்திருத்தக்காரர் இஷ்டப்படி நடக்கலாமா? வைதிகர் இஷ்டப்படி நடக்கலாமா? தீண்டாதார் இஷ்டப்படி நடத்தலாமா.? என்று தந்தலையாட்டமாய் வரும்போது வகுப்புவாரியாக மனிதர்களே பிரிக்கப்பட்டுப் போய்விடுகிறார்களே. அப்பொழுது ஜாதிவித்தியாசத்தை வேரோடு கெல்லிவிடுவதெங்கே. மனிதர்களுள்ளே வித்தியாசம் பாராட்டப்படுகின்றதே. ஆகவே வித்தியாசத்தையழிக்க நினைப்பவர்களுக்கே வித்தியாசம் பாராட்டும்படி நேரிட்டுவிடுகிறது. இவ்விதமாக வித்தியாஸப்படுவதைத்தான் நெடுநாளாக ஜாதிபேதமென்று வியவகரித்து வருகிறார்கள். ஜாதிபேதமென்ற சப்தத்தில் விரோதமிருந்தால் வேறு சப்தத்தை இஷ்டம்போல் போட்டுக்கொள்ளட்டும். வித்தியாஸமுள்ளது என்றைக்குமுளதே. அதையழிக்க எவராலுமில்லை. ஆகையால் அனாதியாய் வந்ததை ஓர் சிலர் கொள்கையில் மாற்றிவிடக்கருதுவது சாத்தியமில்லாத காரியம்." எப்பொழுதும் போலவே பிராணிகளிருந்து அன்யோன்யமாய் வாழ்வார்களாக.

சுபம் !

பத்திராதிபர்.

ஆர்யதர்மம்.
பிரமோத-ஸ்ரீ வைகாசி-மீ ௨௨

எல்லோருடைய எண்ணப்படி நடக்குமா ?

மனதில் நினைத்ததை வெளியிடமுடியாமல் பசு பக்ஷி முதலிய திர்யக்ஜந்துக்களும் ஸ்தாவரங்களும் இருக்கின்றன. அவைகளைத்தவிர மானிடவர்க்கங்கள் பெரும்பாலும் வாக்குஎன்றகருவி இருப்பதால் தங்கள் மனதில் நினைத்ததை வெளியிடுகிறார்கள். ஊமையாயிருப்பவர்களும் ஏதோசில ஜாடைகளால் தனது கருத்தை வெளிப்படுத்துகிறார்கள். அதில் எல்லோரும் நினைப்பது ஒரே மாதிரியாயிருப்பதில்லை. ஒவ்வொருவனது நினைப்பும் வித்தியாஸமுள்ளதாகவே இருக்கின்றது அவ்வாறிருக்கும் எல்லோருடைய எண்ணப்படியெல்லாம் யாவராலும் நடக்க முடியுமா? ஒரு நாளும் முடியாத காரியம். ஒரே எண்ணமுள்ள ஒரு கூட்டத்தார் நினைக்கிறபடி உலகத்தார் நடக்க ஏற்பாடுசெய்வதாயின் அதுவும் சாத்யமில்லாத காரியம். அப்படி எண்ணமுள்ள கூட்டத்தாரின் நினைப்புக்கு மாறுபாடான நினைப்பு வேறு கூட்டத்தாருக்கு இல்லாமலிருந்தால் ஒருவாறு அது சாத்தியமாகலாம். வேறொரு கூட்டத்தார் வேறுவிதமாக நினைப்பது பிரத்தியக்ஷமாயிருக்க அது எப்படி சாதிக்கும். அனேகம் கூட்டத்தார் அனேகவிதமாக நினைப்பதையெல்லாம் கவனித்து அதில் கெடுதலாயுள்ளவைகளை விலக்கிவிட்டு எல்லோருக்கும் இஹபாஸாதகமாயிருக்கும் ஒரு கூட்டத்தார் நினைத்ததை ஸ்தாபிக்க வெவ்வேறு நினைப்புள்ள கூட்டத்தார் அதிகாரியாகமாட்டார். பக்ஷபாதமில்லாத ஒரு கூட்டம் கண்டுபிடிப்பது கஷ்டம். மானிடவர்க்கத்தில் அகப்படாத வேறு கூட்டம் மனிதலோகத்தில் கிடையாது. தேவலோகத்திலுள்ள கூட்டத்தார் மனிதவர்க்கங்களின் வெவ்வேறுபட்டநோக்கங்களை அறிந்து ஒழுங்குபடுத்தட்டுமே என்றால் அந்தத் தேவக்கூட்டத்திலும் அபிப்பிராயபேதமிருப்பதை ஸரிப்படுத்த எவரால் முடியும்?

ஆகவே எல்லாவற்றிற்கும் காரணபூதனுயிருந்து ஆக்கவும், அளிக்கவும், அழிக்கவும், சக்தியுள்ள பரமேசுவரன் ஒருவன் எண்ணப்படி நடப்பதே தகுதியாகும். அவரது எண்ணம் இங்கு மனிதக் கூட்டத்தார் எண்ணத்திற்குஒத்ததாயிருக்குமென்றுநினைக்கப்பிரமாணமில்லை. மானிடவர்க்கத்தில் ஒரு சிலர் ஜாதிபேதமே வேண்டாமென்கிறார். அதனுற்றான் பெருங்கேடு வந்துவிட்டதாகச்சிலர், இந்த ஜாதிபேதமிருப்பதாற்றான் அதற்குத்தக்கவாறு வர்ணாச்ரம தர்மம் விதிக்கப்பட்டு அதன் அதிகாரிகளால் அனுஷ்டிக்கப்பட்டு ஜகத்துக்குப் பெரியதோர் க்ஷேமத்திற்கு ஹேதுவாகிறதென்று பலர். இவ்வாறு பல அபிப்பிராயபேதங்களிருக்கின்றன. இவற்றுள் எதுசரி எது தப்பு என்று சரியானப் பிரமாணமில்லாவிடில் எவராலும் நிச்சயிக்கமுடியாது. ஒருவாறு நிச்சயித்துவிட்டால் அது பக்ஷபாதமாய் நிச்சயிக்கப்பட்டதாகக் கருதப்பட்டுவிடும். ஆகையால் மானிடவர்க்கங்கள் அவ்வப்பொழுது தோன்றியபடியெல்லாம் நினைப்பது வீணை நினைப்பே ஒழிய பயன்படக்கூடியதல்ல. பரமேசுவரன் ஒருவரது ஸங்கல்பந்தான் ஸத்தியமாயிருக்கும். அதனுற்றான் பரமேசுவரனை பெரியார் ஸத்திய ஸங்கல்பர் என்பர். ஆகவே அவரது ஸங்கல்பத்துக்குத் தக்கவாறு நடந்து வரும் இவ்வுலகில் சிற்சில கூட்டத்தார் சேர்ந்து உலகநடப்பைத் தலைகீழப்புரட்டி விடுவதாக நினைக்கும் மனோராஜ்யம் ஒருக்காலும் நிறைவேராது. பரமேசுவரன் ஆக்ஞைப்படியே யாவரும் நடந்து சிரேயஸ்ஸை அடைவார்களாக.

சுபம் !

பத்திராதிபர்.

திருவாரூரில் உபன்யாஸம்.

பிரும்மஸ்ரீ சாஸ்திரதிலகம் யக்ஞஸ்வாமிசாஸ்திரிகளும் ஷெ யார் சிஷ்ர் வித்வத்பூஷணம் சேங்காலிபுரம் K. வைத்தினதசாஸ்திரிகளும், ஸ்ரீ தியாகராஜப்பெருமான் மஹோத்ஸவத்தை முன்னிட்டு சாமவேதபாராயணத்தை நன்கு நடத்தி ஷெ மஹோத்ஸவத்தில் திருவாரூர் யக்ஞேச்வரகட்டத்தில் ஸநாதனதர்மமும்,காங்கிரீ இயக்கமும், சாரதாசட்ட கண்டனமும் என்ற விஷயத்தை நவீனப்பயிற்சிமுறையில்நன்குஉபன்யஸித்தார்கள். அக்காலத்தில் சுமார் 1000-ஜனங்கள் வெகு ஜாக்கிரதையாக விஷயத்தைக் கவனித்ததுகுறிப்பிடத்தகுந்தது.

குறிப்பு:— ஸ்ரீமான் சாஸ்திரதிலகம் மஹோபதேசகர் இவ்வுலகத்தில் சனாதனதர்மமே அஹிம்ஸாயுக்தமான ஸ்வராஜ்யகொள்கைக்கு உரியதானதென்றும், அந்தமுறையை ஸ்ரீ சங்காசாரிய ஸ்வாமிகள் த்யாகத்தையும் ஆத்மசக்தியையும் கைக்கொண்டு எல்லாவுலகத்தையும் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார்கள் என்பது பிரகதாரண்ணிய உபநிஷத்பாஷ்யத்திலிருந்து காண வெளிப்படுகிறதென்றும், ஆத்மசக்தியால் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை எதிர்பார்க்குங்கால் தேவராஜ்யத்தை ஆளுகிறவர்க்கும் பிடிக்காதென்பதும், மனுஷ்யர்கள் பசுபாவத்தை அடைந்தால் தாங்கள் சுகிக்கலாமென்ற எண்ணத்துடன் தேவர்கள் இருப்பதால் அவர்களுடைய பூர்ணபலத்தை உபயோகப்படுத்துவார்கள் என்றும், ஆனால் மனுஷ்யர்கள் அஹிம்ஸாமுறையில் ஆத்மசத்தை உணர்ந்தால் தேவர்களுடைய பலமே உபயோகமில்லாமல் போய்விடும் என்றும் சுட்டிக்காட்டி, இவ்வழியை மஹாத்மா காந்திஜீ ஆதரித்து வருகிறார் என்றும், அதற்கு வருணாச்ரமதர்மம் மூலமென்றும் சாரதாசட்டம் உபயோகமற்றது என்று காந்திஜீ குறிப்பிட்டது ஸநாதநதர்மத்திற்கு ஆதாரமென்றும், பிரிடிஷார் சனாதன தர்மிகளை ஒருபொருட்டாக எண்ணாததும் ராஜாங்கத்தில் நியாயவாதிகளை அலக்ஷ்யம்செய்வதாகத்தான் முடிகிறதென்றும், காந்திஜீ இப்போது ஆரம்பித்திருக்கிற இயக்கத்தில் நாஸிக்முதலிய இடங்களில் ஆலயப்பிரவேசம் செய்கிறதும், சச்சரவுசெய்கிறதும், சாரதா சட்டத்தைப்போலொத்த விஷயத்தை ஆதரிப்பதும் சனாதனதர்மத்திற்கு நேராக விரோதமானதும் என்பதை நன்கு உணரவேண்டுமென்றும், புண்ணியபூமியில் வேதங்களிடமும் வேதங்களைகண்டுபிடித்த ரிஷிகளிடங்களிலும் அதைக்காப்பாற்றுகிற சனாதனிகளிடமும் அன்புஉண்டாகும்படி தங்கள் நடத்தைமூலமாகவோ, உபதேசமூலமாகவோ, அவசியம் காந்திஜீ செய்யவேண்டுமென்றும் அடிக்கடி சென்னையில் சிலர் சனாதனதர்மிக்கு எதிர் ஒலி பரப்புவது நாட்டுக்கு கேடு உண்டுபண்ணுவதாக இருக்கிறதென்றும், சாரதாசட்டத்தை ஒரு பொருட்டாக எண்ணுவதே கேவலமாக இருக்கிறதென்றும், முஸ்லீம்கள்போல் நாம் முன்னுக்குவரவேண்டுமென்றும் வற்புறுத்தினர்.

11-4-30ல் திருவாரூரில்வித்வத்பூஷணம்சேங்காலிபுரம்K.வைத்திநாதசாஸ்திரிகள் கீழ்வருமாறு உபன்யசித்தார்கள். இந்துக்களு

டையவிவாஹக்ரியைகளைவேதங்களிருந்துவிவரிக்கும்சமயத்தில் விவாஹக்கிரியைகளை கேவலம் லௌகிகமான ஒரு உடன்படிக்கையாகவோ ஸம்மதவிஷயமாகவோ எண்ணிவிடுவது இந்துவர்ணாச்ரமதர்மங்களுக்கும் வேதசாஸ்திரஸம்ஸ்காரதர்மங்களுக்கும் உத்தேசங்களுக்கும் முழுவதும் விரோதமாக இருக்கின்றது. இந்துக்களில் மேல்வருணத்தார் மேலே சொன்ன லௌகிக விவாஹத்தை சில ஜாதிக்காரர்களுக்காகத் தள்ளி நிறுத்தி அதைக் கடந்த மேலான கிரியா விவாஹத்தை ஆதரித்து க்ஷேமத்தையும், மானத்தையும், தீர்க்காலோசனை செய்து நடப்பித்து வருகிறார்கள். மனம்போனபடி சஞ்சரிக்காமல் கட்டுடனும் காவலுடனும், ஸ்திரீகள் பாதுகாக்கப்படுகிறார்கள் என்பது எங்கள் பேரில் அபவாதம் சொல்லப்படுகிறது. அது பிசகு. வேதத்தில் ஸம்ராக்ஞீ என்று நாங்கள் தான் கூவி ஸ்திரீகளை அழைக்கிறோம். ஆகையால் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற சாரதாசட்டம் சுத்த அனாவசியம். சிறுவர்களை ரக்ஷிக்க இயற்கையிலேயே மிகவும் பாத்தியப்பட்டிருக்கிற பெரியோர்களுடைய கடமையையும் உத்திரவாதத்தையும் ஆலோசனைகளையும் செலுத்துவதற்கு அவமானகாமான இடையூறாக இருக்கிறது. இப்பொழுது அடிமைத்தனத்திலிருந்து நீக்கும் வழியைத்தேடுகிற சீர்மாற்றக்காரர்கள் பாரதநாட்டில் பிறந்தவர்களுக்கு அனர்த்தங்களையும் பெண்ணுக்கும், குடும்பத்திற்கும் ஜாதிக்கும் சாரதா ஆக்டு மூலமாக இந்தியன் பினல்கோர்ட் மூலமாக கவர்மெண்டைக் கட்டிக்கொடுத்து எழுப்பி ஹிம்ஸை செய்வது அஹிம்சாதர்மத்திற்கு முற்றிலும் விரோதமானதென்று என கருதவில்லையே. தேவரிஷி பிதருக்களை பிரமாணமாகக்கொண்டு நடக்கிற நாங்கள் லண்டன் கமிட்டியாரையோ, இந்தியாமெம்பர்களையோ மதாசார விஷயங்களில் ஸ்வீகரிப்பது எப்படி? அன்றியும் கிரந்தங்களில் கண்டாலும், காணாவிட்டாலும் வைதிகர்களும் பண்டிதர்களும் பாரம்பரிய உபதேச ஆசாரப்பிரகாரம் நடந்து வருகிறமார்க்கமே சரியானமார்க்கம். இந்துக்களுக்கு ஆக்ஷேபணைகள் உண்டாகிற விஷயத்தில் சாஸ்திரத்தோடு வேதங்களைக்கற்றுணர்ந்த பிராமணசபை கூடி ஆசார்ய ஸன்னிதியில் தீர்த்துக்கொள்வதே எங்களுக்கு தர்மம். கவர்ன்மெண்டாருக்குள்ள சந்தேக ஆக்ஷேபணைகளை மேலே சொல்லியபடியே நிவர்த்தி செய்து எங்களை இரக்ஷிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

K. வைத்தினாதய்யர்.

உத்தம பிராமண தர்மம்.

வேதசாஸ்திர இதிஹாஸபுராணங்களினால் கூறப்பட்டதும், வர்ணங்களாலும் ஆச்ரமங்களாலும் தன் அதிகாரத்திற்குத் தக்கபடி ஸம்பாதிக்கக்கூடியது தர்மம் ஒன்றே. இந்த தர்மத்திலும் பரம் என்றும் அபரமென்றும் இருவகையுள்ளது. பரமாவது யோகஸமாதியிலிருந்து ஈச்வரனைக் காண்பதே. இது எல்லோருக்கும் கிடைக்கக்கூடியது சுலபமில்லை. மற்றொன்றோவெனில் தபஸ், யாகம், வேதமோதல் முதலான பல பேதங்களுள்ளது. இந்த தர்மத்தை தர்மமே நேரில் வந்து நானே தர்மமென்றாவது அல்லது தேவாதிகள்வந்து இதுதான் தர்மமென்றாவது சொன்னதில்லை. ஆர்யர்கள் கொண்டாடுவது தர்மம். நிந்திக்கிறது அதர்மம். இதுவும் நித்யகாம்யபேதங்களால் பலவகைப்படும். காம்யங்களை நீக்கி நித்யங்களை விசாரிக்கப்புகின் ஒவ்வொரு ஜீவன்களுக்கும் நிஷேகம்முதலாக ச்மசானம்வரையில் சரீரசுத்தியையும் பிராம்மண்யப்பிரகாசத்தையும் கொடுக்கக்கூடியவைகள் நாற்பது கர்மாக்களாகும். இவைகள் நித்யகர்மாக்கள். இவைகளால் பிராம்மண்யபூர்த்தி சித்திக்கின்றது. (40 கர்மாக்கள் நமது பத்திரிகையில் வெளியாகியும் முறையே எழுதப்பட்டும்வருகின்றன. ஆகையால் இங்கு விவரிக்கவில்லை.) ஷை 40 கர்மாக்களல்லாமல் இன்னும் பல ச்ரௌதஸ்மார்த்த கர்மாக்கள் இருப்பினும் ஸம்ஸ்காரங்களில் சேர்ந்தவைகளில்லை.

இவ்வித ஸம்ஸ்காரங்களால் சுத்தியடைந்தவருக்கே வேதாந்தவிசாரத்தில் அதிகாரமும் ஸ்வாரஸ்யமுமேற்படும். இந்த ஸம்ஸ்காரங்கள் அவச்யமாயிருப்பதால் இவைகளில் சிலவற்றுள் கோவையும், சிலவற்றுள் பசுவென்றும் சாகத்தையும் (ஆறுடு) விசஸனம் பண்ணும்படி ஏற்படுவதால் தோஷமேற்படுமே என்கிற சந்தேகமே வேண்டியதில்லை. இச்சந்தேகநிவர்த்திக்காகவே பிர்ம்மமீமாம்ஸாசாஸ்திரத்தில் வியாஸாசாரியர் கூறின ஸூத்ரத்திற்கு ஸ்ரீமதாசார்யபகவத்பாதாள் பாஷ்யமெழுதும்பொழுது "பசுஹிம்ஸையுள்ள ஆத்வரகர்மாவானது பாபபலத்தைக் கொடுக்குமோவென்கிற ஆக்ஷேபத்திற்கு 'शब्दात्' வேதங்கூறியிருப்ப

தால் பாபமில்லை என்றருளினர். தர்மாதர்மங்களை சாஸ்திரத்தினால்மாத்திரம் தெரிந்துகொள்ளலாமேதவிர இந்திரியாதிகளினல் பார்க்கக்கூடியதில்லை.

யாகாதிகளில் பசுவை உபயோகப்படுத்துவதால் அப் பசுக்கள் சுவர்க்கலோகத்தை அடைவதற்கு நிமித்தமாகிறது. அப்படிச் சுவர்க்கலோகப் பிராப்திக்கு ஹேதுவான காரியம் ஹிம்ஸையாகாது. மேலும் அதற்கு காப்பாகவுமாகிறது.

கிருஷ்ணயஜுர்வேதம் மூன்றுவதஷ்டகம் எழாவது பிரச்னம் எழாவதனுவாகத்தில் கடைசி மந்திரத்தில் யாகப்பசுவை "நீ இறக்கவில்லை, கஷ்டப்படவில்லை, நல்லவழிகளால் தேவலோகத்தை அடைகிறாய். எங்கு புண்ணிய சிலர்கள் ஸ்தானத்தை அடைகிறார்களோ, அங்கு உன்னை தேவனான ஸவிதா அடைவிப்பார்" என்று கூறியிருப்பதைக் காணலாம். அப்படியே மனுஸ்மிருதியிலும்,

यज्ञार्थं पशवस्सृष्टाः स्वयमेव स्वयंभुवा ।
यज्ञोऽस्य भूत्यै सर्वस्य तस्माद्यज्ञे वधोऽवधः ॥
ओषध्यः पशवो वृक्षास्तिर्यञ्चः पक्षिणस्तथा ।
यज्ञार्थं निधनं प्राप्ताः प्राप्नुवन्त्युच्छ्रितीः पुनः ॥

" யக்ஞத்திற்காகவே பசுக்கள் ஸிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. பிரபஞ்சத்தில் எல்லா மேன்மைக்கும் யாகந்தான் காரணம். ஆனதால் யாகத்தில் மரிப்பது வதமில்லை. செடி, கொடி, பசு, பக்ஷி, பிராணிகள் யாகத்தில் மரணமடைந்து மேல் பதவியை அடைகின்றன" என்று சொல்லியிருப்பதால் யாகத்தில் பசுவிசஸனம் வேதசாஸ்திர ஸம்மதமேயாகிறது. ஆனாலும் மற்றொன்று,

மேற்கண்டபடி பிராணிஹிம்ஸை சாஸ்திரஸம்மதமாயினும் அவைகளில் மாம்ஸபக்ஷணம் ஏற்படுவது தோஷமாகுமோவென்றால் அதுவும் தோஷமில்லை. மனுஸ்மிருதியில் விதியையறிந்தவன் நியாயமில்லாமல் ஆபத்தில்லாதகாலத்தில் மாம்ஸபக்ஷணம் செய்யக்கூடாது. அப்படி விதியில்லாமல் சாப்பிட்டால் இவனை மறுஜன்மத்தில் அவைகள் சாப்பிடுகின்றனஎன்றிருப்பதால் ஆஹாரத்திற்கு மாம்ஸபக்ஷணம் செய்கிறவனை நிந்திக்கப்பட்டிருக்கிறது.

யாகத்தில் விதியாகவந்த மாம்ஸத்தை ஹவிச்சேஷத்தை பக்ஷிக்காமற் போனல், அவனும் பசுஜன்மத்தை இருபத்தோரு தடவை அடைவான் என்றிருக்கிறது. ஆகையால் விஹிதமான பக்ஷணம் செய்யாவிட்டால் மஹாதோஷம ஏற்படுவதால் பிராம்மண்ய பூர்த்திகாமாயுள்ள ஸம்ஸ்காரங்களில் பசுவதமானது, ஹவிச்சேஷபக்ஷணமாவது கொஞ்சங்கூடதோஷத்திற்கிடமேயில்லை. ஆகையால் உத்தம பிராம்மண தர்மமாவது—"ஆசார்யகுலத்திலிருந்து வேதமோதி குருவினிடமிருந்து உத்திரவுபெற்றுத் திரும்பி வந்து உத்தம தர்மபத்தினியுடன் கிருஹஸ்தாச்ரமத்திலிருந்து யாகாதிகளால் ஈசுவரார்ப்பணம் செய்தும் எல்லாப்புலன்களையும் அடக்கி யாகத்தைத் தவிர ஒரு பிராணிகளையும் ஹிம்சிக்காமலிருந்து ஆயுஸ்ஸைக்கழிப்பானுகில்கடைசியில்பிர்ம்மலோகம்சென்று அங்கிருந்து முக்திபெருகிறுன் திரும்பி வருகிறதில்லை' என்று சாந்தோக்யத்திலும், பிரம்மசூத்திர பாஷ்யத்தில் "விதியாயுள்ள யாகங்களை அனுஷ்டிக்கிற கிருஹஸ்தனுக்கு மறுபிறப்பற்ற பிர்மமப்பிராப்திக்குதவியான உபாஸனுதிகாரம் கிட்டுகிற"தென்றும்கூறியிருப்பதால் இக்கலியிலும் சுத்தமான கிரதுக்களை அனுட்டித்து வருகிற மஹான்களைப் பாராட்டி இதை முடிக்கிறேன். சுபம்!

ஓர் ஸமாதானம்.

ஆபஸ்தம்பசிராத்தத்தில் ஹோமத்திற்குப்பிறகு அன்னுபிமர்சனத்தில் மந்திரங்களை ஊஹம் செய்யவேண்டுமா? இதற்குப் பிரமாணம் எங்கே!

இதுவிஷயம் ஆக்ஷேபமில்லாமல் சாஸ்திரஸம்மதமாயனுஷ்டிக்கப்பட்டுவருதாலும் மூலப்பிரமாணத்தை விசாரிக்க உத்ஸாஹமுள்ள சங்கேகியின் முயற்சியை மெச்சி எனக்குத் தோன்றினவரை ஸமாதானம் எழுதலானேன்.

"तस्मादृचंनोहेत्", "ऋगन्तेचनोहः"

என்கிற வாக்கியங்கள் ருக்குகளில் ஊஹத்தைத் தடுக்கின்றது. 2 அல்லது 4 வாக்கியங்களுள்ளது ருக்குகள். இந்த நியமமில்லாதது யஜுஸ்ஸுகள். ஆகையால் அன்னுபிமர்சனமந்திரம் ருக் இல்லாததால் ஊஹம்செய்யத் தகுதியுள்ளதே.

2. ஆப. கிரு. கண். 11-ஸூத்ரம். 14 "ஸாச்ரவ" என்கிற மந்திரத்தால் பிர்ம்மசாரிகள் தண்டத்தைஎடுத்துக்கொள்ளவேண்டும் என்றும், பிராமணன் புரசும், க்ஷத்திரியன் ஆலும், வைசியன் இலந்தையாவது அத்தியாவது என்று தண்டங்களின் வித்தியாசமும் கூறியிருக்கிறது. அதன் மந்திர அர்த்தமோ புரசமா ஸ்தோத்திரமாயிருக்கிறது. இம்மாதிரி ஸ்தோத்திரத்தால் ஆல் முதலான தண்டங்களை எடுக்கிறபோது லிங்கவிரோதம் ஏற்படுகின்றதே என்றால், சுருதியின் பலத்தால் லிங்கத்தைவிட்டு இந்த ஒரே மந்திரத்தால் எல்லா தண்டங்களையும்எடுக்கவேண்டும் என்று வியாக்கியானத்தில் குறிப்பெழுதப்பட்டிருக்கிறது. அதைப்போல் மேற்கண்ட அன்னாபிமர்சன ஸூத்திரத்திற்கு விசேஷக்குறிப்பு ஒன்றும் எழுதாததால் ஊஹிக்கவேண்டியதே. 'नप्रकृतावूहोविद्यते' என்பதால் பிரத்யாப்திகம் விகிருதியானதால் ஊஹமுண்டு.

3. அன்னஹோமமந்திரங்கள் 6-க்கும் ஊஹம்சொல்லி 7-வது மந்திரத்தில் தூரத்திலிருக்கிற மனிதனைக்குறிக்கிற சப்தம் இல்லாதபடியால் இரண்டு தகப்பனுள்ளவனுக்கும், (ஜனகன் & ஸ்வீகிருதன்) இந்த மந்திரத்தில் ஊஹம்வேண்டாம் என்று நிஷேதித்தும், அதேவிடத்தில் சில ச்ரௌத நியாயத்தை விளக்கி, இதைப்போல் அன்னாபிமர்சனத்திலும் ஊஹம் வேண்டுமென்றார் சுதர்சனாசாரியார்.

4. விஷ்ணுஸ்மிருதி அத்தியாயம் 75.

मातामहानामप्येवं श्राद्धं कुर्याद्विचक्षणः ।
मन्त्रोहेन यथान्यायं शेषं मन्त्रविवर्जितम् ॥

यथान्यायमिति, यत्र बहुवचनान्तः पितृशब्दः, तत्र सर्वपितृवाचित्वान्नोहः।
பிதிருசப்தங்கள் பன்மையாயிருந்தால் அவைகள் எல்லா பிதிருக்களையும் சொல்லுவதால் ஊஹமில்லை. ஒருமையாயிருந்தால் ஊஹமுண்டு என்றாயிற்று. பிரஸ்தாப அபிமர்சனமந்திரத்தில் ஏகவசனமாயிருப்பதாலும்,மந்திரார்த்தங்கள் சிராத்தத்தில் உத்தேச்யர்களைக் குறிக்கிறபடியினாலும்,

"भोज्यपदार्थान् एकैकेन मन्त्रेण यथालिङ्गमभिमृशेत्"

என்கிற வாக்யத்தாலும் போஜனநிமித்தமாக வரிக்கப்பட்டிருக்கிற பிதிருக்களின் லிங்கப்ரகாரம் ஊஹிக்கவேண்டும்.

5. கிருஹ்யஸங்கிரஹத்தில், மாதாமஹ சிராத்தத்தில் பித்ராதி சப்தங்களில் மாதாமஹாதிகளை ஊஹிக்கவேண்டும்.

अन्नहोमे "तथास्पर्शे" जलपिण्डादिदानके । "स्पर्शे"

என்கிற அன்னுமிமர்சனம் ஊஹிக்கச் சொல்லியிருக்கிறபடியால் மாதிருசிராத்தத்திலும் ஊஹம்நியாயமானதே.

6. சுருதி முதலான நான்குப் பிரமாணங்களில் ஆசாரம் இதில் பிரமாணமுமாகும். இவ்வளவு தூரம் இதுவிசாரிக்கவேண்டியது அவசியமில்லாவிடினும் எல்லாகர்மாக்களும் நமது முன்னோர்கள் சாஸ்திர ஆதாரத்துடன் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை காட்டவேண்டியே இதை எழுதநேர்ந்ததாகும். சுபம்;

"கிருஹ்யக்ஞ" வி. உமாமஹேசுவரசாஸ்திரி.

ஸந்தேஹநிவிர்த்தி.

கார்த்திகை-மீ 27உ ஆர்யதர்மத்தின் 704-வது பக்கத்தில் ஸத்தியமங்கலம் பிர்மஸ்ரீ நாராயணசாஸ்திரிகள் எழுதிய ஸந்தேஹத்திற்கும் S. K ராமகிருஷ்ணசாஸ்திரிகள் எழுதிய ஸந்தேஹத்திற்கும் ஸமாதானம்.

சிராத்தத்தில் ஹோமம், பிராம்மணபோஜனம், பிண்டதானம் இம்மூன்றும் பிரதானமாகும். மாஸிசிராத்தப்ரகிருதியான மாதிருசிராத்தத்தில்

स्त्रीमृताहे स्त्रियो भोज्याः पितरःस्त्रीसपिण्डने ।
पित्रादेरेव होमस्स्यात् पिण्डदानं तु वर्गयोः ॥

என்றவசனப்படி மாதிருவர்க்கத்துக்குமட்டிலும் உத்தேசியத்வம் ஏற்பட்டது. ஹோமமந்திரத்தில் ஊஹத்துக்கு அவகாசமில்லாததால் பிதிருவர்க்கத்துக்குமட்டிலும்ஹோமம்ஏற்பட்டது. ஆயினும்

सापिण्डीकरणादूर्ध्वं पितृभ्यो यत् प्रदीयते ।
सर्वेष्वंशहरा माता त्विति धर्मस्य निश्चयः ॥

என்ற வசனப்படி மாத்ராதிகளுக்கும் திருப்தியாகிறது. பிண்டதானத்தில் தனித்தனியே மந்திரங்களிருப்பதால் இரண்டுவர்க்கங்களுக்கும் பிண்டதானம் ஏற்பட்டது.

அன்னுபிமர்சனவிஷயத்தில்

“ सर्वमुत्तरैरभिमृशेत् क्लृप्तान्वाप्रतिपूरुषं ”

என்ற ஸூத்ரங்களுக்கு

“ ब्राह्मणभोजनार्थं हविष्यमहविष्यं च सर्वमन्नं ” என்றும்,

“ प्रतिपूरुषं भोजनपात्रेषु प्रकल्पितान् ”

என்றும் வியாக்யானம் செய்திருப்பதாலும் பித்ராதிஸ்தானங்களிலே மாத்ராதிஸ்தானங்களிலே அனேகம் பிராம்மணர்களை நிமந்திரணம் சொல்லியிருந்தால் ஒவ்வொரு போஜனபாத்ரங்களிலும் தனித்தனியே மந்திரங்களை ஆவிருத்திசெய்து அபிமர்சனம்செய்ய வேணுமென்று தார்த்பர்யதர்சனத்தில் சொல்லியிருப்பதாலும், இந்த அன்னுபிமர்சனம், போஜனத்தைச் சேர்ந்ததென்றே சொல்லவேண்டும். ஆகையால்உத்தேசியர்களான மாத்ராதிகளுடைய போஜனபாத்திரத்தில் பரிவேஷிதமான ஹவிஷ்யாதிகளை அனுத்தேசியர்களான பித்ராதிகளுக்கென்று அபிமர்சனம் செய்வது நியாயமில்லை.

பிரகிருதியான மாஸிசிராத்தத்தில்

अत्र यद्यपि मात्रादिभ्यः पृथक्पिण्डदानदर्शनं ।
तथापि पृथक्ब्राह्मणभोजनं न भवति ॥

மாதிருவர்க்கத்துக்கு உத்தேசியத்வமில்லை என்பதற்காகச்சொல்லியிருக்கும்

“ होमाभिमर्शनयोः पृथक्त्वाभावात् ”

என்ற ஹேதுவைக்கொண்டு எந்த சிராத்தமாயினும் ஹோமம் போலவே பிதுருவர்க்கத்துக்கே அன்னுபிமர்சனம் செய்யவேணுமென்பது பொருத்தமாகாது. வைத்யநாததீக்ஷிதீயத்திலும் பிதிருவர்க்கத்துக்குமட்டிலும் உத்தேசியத்வமுள்ள தர்சாதிசிராத்தங்களில் पृथक्त्वाभावात् என்பதைச் சொல்லியிருக்கிறதேதவிர, மாதுருவர்க்கத்துக்குத் தனித்தனியே உத்தேசியத்வம் சொல்லியிருக்கும் மஹாளயமாதுருசிராத்தாதிகளிலும்கூட என்று சொல்லப்படவில்லை. न प्रकृतावूहोविद्यते என்றதால் பிரகிருதியில்ஊஹிக்கக்கூடாதேதவிர விகிருதிகளில் ஊஹிக்கத்தடையில்லை. ஸத்யாஷாட ஸூத்ரிகள் திருபிண்டரீதியான மாதிருசிராத்தத்தில்

एषतेतत என்பதை एषतेमात: என்றுஊஹித்து பிண்டாபிமர்சனம் செய்வதைக்கவனிக்கவும்.

எதிலும்ஊஹமே கூடாதென்றுசொல்லும்பக்ஷத்தில்பிண்டபிது ருயக்ப்ரகிருதியானமாதிருசிராத்தத்தில் एतत्तेततयेचत्वामनु என்று பிதுருவர்க்கத்துக்கு மட்டிலும் சொல்லியிருக்கும் மந்திரங்களை மாதிருவர்க்கத்தில் ஊஹிக்க நியாயம் எப்படி ஏற்படும்?

ஆகையால் திருபிண்டிகள் பிண்டமந்திரங்களை ஊஹிப்பது போலவும், ஸத்யாஷாடிகள் பிண்டாபிமர்சனத்தில் ஊஹிப்பது போலவும், ஆபஸ்தம்பியர்கள் மாத்ராதிகளுடைய ப்ரத்யாப்திகத்திலும் எங்கெந்த இடத்தில் மாத்ராதிகளுக்குத் தனியே உத்தேசியத்வமுண்டோ, அந்த மஹாளயாதி சிராத்தங்களிலும் "தத" என்பதை मात: என்று ஊஹித்து அன்னபிமர்சனம் செய்ய வேண்டுமென்பது ஸித்தம்.

இப்படியே பெரியோர்களுடைய அனுஷ்டானங்களும் இருந்துவருகின்றன.

சங்கரசாஸ்திரி,
சோழவந்தான்.

ரகுனாத்தாஸ் கோஸ்வாமி.

நீர்வளம், நிலவளம் ஸகலஐசுவர்யம் நிறைந்த புண்ணிய பூமியாகிய நம்முடைய பாரதகண்டம் கல்வியிலும் ஞானத்திலும் சிறப்புப்பெற்ற அனேக புண்ணிய ஆத்மாக்கள் ஜனித்த தேசமென்று எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். அவர்கள் காலக்ரமேண அவதரித்து இம்மைக்கும் மருமைக்கும் பயனையளிக்கக் கூடிய வழிகளைக்காட்டி ஆன்மகோடிகளுக்கு தீபவொளியாயிருக்கிறார்கள். தென்தேசம் அறுபத்திமூவர் ஆழ்வாராதிகள் மற்றும் பல மதாசாரியாளும் பிறந்தஸ்தானமாகையால் தென்தேசத்தின் கீர்த்தி விளங்கியிருக்கிறது. ஸிந்து, கங்கையென்ற ஜீவநதிகளினால் செழிப்பான பூமியான வடதேசம் த்யாகசிரேஷ்டாளான அநேக ஞானிகளுக்கு உத்பத்திஸ்தானமென்பது உலகப்பிரசித்தி.

வடதேச தென் தேசங்களுக்கு மிகவும் அன்யோன்யப் பழக்கம் இருந்தது. தீர்த்தாடனம், க்ஷேத்ராடனம், பூபிரதக்ஷிணம் முதலானது ஸஹஜமாக இருந்தது. தேசந்தோரும் பாஷை

கள் வேறாயிருந்தாலும், கீர்வாணபாஷை பொது பாஷையாக இருந்தது. ஆனால் தேவபாஷையின் பயிற்சிக் குறைவினால் இப்பொழுது வடதேசத்து விஷயங்களில் முக்கியமாக நமக்குத் தெரியவேண்டிய மஹான்களின் சரித்திரங்கள் தென்தேசத்தில் எட்டுகிறதில்லை. ஸம்ஸ்கிருதபாஷையின் பரிசயத்தால் யாத்திரிகாள் மூலமாகவும் புராண சிரவணம் பஜனைகள் மற்றும் சாஸ்திர பரிஷத்துக்கள் மூலமாகவும், சத்விஷயங்கள் ஜனங்கள் காதுக்கு முன்காலங்களில் எட்டிக்கொண்டிருந்தது. இப்பொழுது பத்திரிகைகள் மூலமாக அறிகின்றார்கள்.

கங்காநதியால் செழிப்பான வங்கதேசத்தில் சாக்தமதம், வைஷ்ணவபக்தி முதலானது அதிகமாக பரவியிருந்ததும், வைஷ்ணவ பக்தசிரோமணியாகிய கௌராங்கரென்ற சைதன்யஸ்வாமிகள் ஸம்ஸாரத்தில் தவித்துக்கொண்டிருக்கிற அனேக ஆத்மாக்களை மோக்ஷமார்க்கத்திற்கு வழிகாண்பித்ததும் பலர் கேட்டிருக்கூடும். இவருடைய பிரதான சிஷ்யர் சுமார் 428-வருஷத்துக்கு முன் முகம்மதியர் ஆக்ஷிக்கு உட்பட்ட சப்தக்கிராமமென்ற பெரிய நகரத்தில் காயஸ்தர் குலத்தில் உதித்த ரகுநாத்தாஸ்தத்தகோசுவாமி விளங்கியந்தார். கோஸ்வாமி என்றால்வடதேசத்தில்வைஷ்ணவபக்தனைக்குறிக்கும் காரணப்பெயர். இந்த பரமபக்தன் கல்வியிலும், பக்தியிலும், நற்குணம் ஆசாரத்திலும் சத்புருஷனென்று கொண்டாடப்படுகிறார் இவருடைய தகப்பனாரும் சிறியதகப்பனாரும் அந்த ஊர் நவாபினிடத்தில் கலெக்டராகஇருந்தார்கள். அவர்கள் மிகுந்த ஐசுவர்யவான்களாயும், அதற்கொப்ப உதாரமான குணமுடையவர்களாயும் இருந்தார்கள் ரகுநாத்தாஸ் அவர்களின் மனது பால்யத்திலேயே பூர்வஜன்ம ஸம்ஸ்காரத்தினால் த்யாகவழியிலே சென்றுகொண்டிருந்தது. ஒரு தினம் ஒரு ஹரி பக்தனின் உருக்கமான பக்தி கீர்த்தனங்களைக்கேட்டமாத்திரத்தில் அவருள்ளமுருகி ஈசுவரத்யானத்தை நோக்கிச்சென்றது.

இத்தியானமே சித்தத்திலிருந்ததால் மானிடசிரோமணியாக சைதன்யசுவாமிகளிடம்போய் தனக்கு நாலாவதுஆச்ரமத்தைக் கொடுக்கவேணுமென்று கேட்க, அவர் அச்சிறுவனுடைய ஐசுவர்யத்தையும் பால்யத்தையும் கவனித்து மறுத்துவிட்டார். மேலும் சைதன்யருக்கு ரகுநாத்தாஸின் குடும்பத்தார்களை நன்றாகத்

தெரியும். ரகுனத்தாஸ் மிக்கவும் துயரத்தில் ஆழ்ந்துகிடந்தார். மற்றொரு தடவை சாந்தபுரமென்ற ஊருக்கு சைதன்யஸ்வாமிகள் யாத்திரையில் வந்திருந்தபோது மறுபடியும்போய் தரிசிக்க ரகுனுத்தாஸ் சென்றார். அப்பொழுது அவருடைய தகப்பனர் அனேகம் வேலையாட்களைக் கூட அனுப்பி சீக்கிரத்தில் திரும்பி வரவேண்டுமென்று விடைகொடுத்தனுப்பினர். ஒருவாரம் வரையிலும் சைதன்யசுவாமிகளிடம் கூட இருந்துவிட்டு திரும்பிவந்துவிட்டார். தாய் தகப்பன் புத்திரனைக்கண்டதும் சந்தோஷித்து புத்திரனுடைய எண்ணத்தை மாற்றவேண்டுமென்று தங்களுடைய ஏராளமான சொத்தை அவரிடம் ஒப்புவித்தும் அவர்மனம் உலகவாஞ்சையில் செல்லவில்லை. எப்பொழுது இந்த நிர்ப்பந்தத்தை விட்டுவிடலாமென்று ஒரே நோக்கமாயிருந்தார். இன்னும் சிலகாலம் சென்றபிறகு ஜகன்னுதமென்ற புரிக்கு சைதன்யசுவாமிகள் வந்திருந்ததைக்கேட்டு அவரைத்தரிசிக்க ஆவலுள்ளவராகி சமீபத்திலிருந்த நித்யானந்தரென்ற ஒரு விஷ்ணுபக்தரை தரிசித்து ஒரிரவு நடுநிசியில் யாருக்கும் தெரியாமல் வீட்டைவிட்டுப் புறப்பட்டு தகப்பனர் தன்னைப் பின் தொடராவண்ணம் காடு மேடுகளின் வழியாக அன்னுகார நித்திரையின்றி ஜகன்னுதபுரியை நோக்கிச் சென்றார். அவ்வூரையடைந்து சைதன்யஸ்வாமிகளைக்கண்டு ஆநந்தபரவசமாகி அந்த மஹாத்மாவை சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கவும், அந்த காருண்ய ஆத்மா ரகுனுத்தாஸைக் கட்டி அணைத்துச் சிறுவனுடைய பக்திக்கு மகிழ்ந்து தன்னுடைய சிஷ்யனுக அங்கீகரித்துக்கொண்டார்.

ரகுனுத்தாஸ்கோஸ்வாமியின் தகப்பனர் புத்திரனைக்காணுமல் மிகவும் துக்கப்பட்டு நாலுபக்கமும் புத்திரனைத் தேட ஆட்களை அனுப்பினர். ஆனுல் அவர் காடுமேடு வழியில் போனதால் அகப்படவில்லை. ஜகன்னுதத்தில் உத்ஸவம் முடிந்ததும் யாத்ரிகர்கள் திரும்ப அவரவர்கள் ஊருக்குத் திரும்பிச்சென்றார்கள். சப்தகிராமத்திற்குத் திரும்பிவந்த சிலர் ரகுனுத்தாஸ் ஜகன்னுத்புரியில் இருப்பதை அவர் தகப்பனரிடம் தெரிவிக்க அவர் மிகவும் வருத்தப்பட்டு, புத்திரனை அழைத்துவரும்படி தன்னுடைய மித்திரர்களிடம் ஏராளமான தனத்தைக்கொடுத்து வீட்டிற்கு அழைத்துவரும்படி அனுப்பியும் ரகுனுத்தாஸ் மறுத்துவிட்டார். அகத்தை கண்டவன் எவன் இகத்தை என் திரும்பிப்பார்க்கிறான். ரகுனுத்தாஸ்

குருவின் ஆக்ஞைப்படி தீவ்ரமான தவஞ்செய்தார். அந்தசைதன்ய ஸ்வாமிகள் இவருக்கு சிலஉயர்ந்தநீதிவாக்கியங்களைப்போதித்தார். அவைகளாவன—வீண்பேச்சகற்று, அவ்வார்த்தைகளுக்குச் செவி கொடாதே. புஷ்டியான ஆஹாராதிகளை உட்கொள்ளாதே, விலையுயர்ந்த ஆடைகளை அணியாதே, ஈச்வரநாமத்தை அடிக்கடி சொல்லு, ஈச்வரனை ஸதா மனதில் தியானம் செய்'என்று. அதன்படியே ரகுநாத்தாஸ் நல்ல ஆஹாரங்களை உண்ணாமல், உயர்ந்த ஆடைகளை உடுக்காமல் சதா ஈச்வரநாமத்தை ஜபித்துக்கொண்டும் ஈச்வாருடைய ரூபத்தைத் தியானித்துக்கொண்டும் 16-வருஷம் தீவ்ரமான தபசு செய்தார். பரமகுருவாகிய சைதன்யஸ்வாமிகளிடம் சிரவணம் செய்த வாக்குகளிலிருந்து வைஷ்ணவஸ்மிருதி என்ற கிரந்தத்தை இயற்றினர். சைதன்யஸ்வாமிகள் ஜகன்னாதபுரியில் மோக்ஷத்தை அடைந்தபின்னர், ரகுநாத்தாஸ் பிருந்தாவனம் சென்று அவ்விடம் ரூப்சோனாத்தாஸைனபவருடன் இருந்தார். சுமார் 50வருஷகாலம் தன்னுடைய சத்காலக்ஷேபத்திலே தன்னுடைய நாட்களைக் கடத்தி அதிக முதிர்ந்த வயதில் சாயுஜ்யத்தைப் பெற்றார். இந்த மஹான் கீர்வாண பாஷையில் பாரங்கதன் வைணவ ஆசாரியரிலொருவர். நம்முடைய ஆர்யாவர்த்தத்தில் புராதன ரிஷிகள் காலம் முதல் இதுவரையிலும் ஒவ்வொருமகான்களும் கீர்வாண பாஷையைக் கற்றிருக்கிறார்கள். இப்பொழுது சிலகாலமாக சாஸ்வதி வாக்கான கீர்வாணபாஷையினிடத்தில் சிரத்தை குறைந்து நம்முடைய தர்மத்துக்கு அனேக தீங்குகள் விளைந்திருக்கின்றன. அவைகளை விலக்க எல்லாரும் முயற்சிக்க வேண்டியது. அதனால் சகலரும் ரிஷிகள் வாக்கியங்களடங்கிய இந்த தேவபாஷையைக்கற்று அதனுட்கிடக்கும் ரத்னமயமான இம்மை மறுமைக்கு வழியைக்காட்டும் மார்க்கங்களில் நடந்து, பக்தசிரோமணிகளாகிய சைதன்யஸ்வாமிகளைப்போலவும், ரகுநாத்தாசைப் போலவும் ஆவதற்கு முயற்சிக்கவேண்டும். ரகுநாத்தாஸ் போன்றவர்களின் சரிதங்களைகேட்டால் ஈசுவர அனுக்ரஹத்திற்கு ஆளாவார்களென்பது திண்ணம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

கே. எஸ்.

ஓர் சந்தேஹம்.

பண்டித சிரேஷ்டர்காள்! கொடூரமான இக்கலியுகத்தில் மேல்நாட்டு நாகரீகத்தில் ஈடுபட்டு வைதிககர்மாக்களில் சிரத்தை அற்றவர்களாக இருந்தாலும் சிராத்தகர்மாமாத்திரம் ஒரு மாதிரியாக பிராமணர்களினுல் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதென்பது யாவரும் அறிந்த விஷயமே. அந்த சிராத்தத்திலும் செய்யவேண்டிய கிரமத்தில்சிலசமயங்களில் சந்தேகம்ஏற்பட்டுவிடுகிறபடியால் அது ஆஸ்திகர்களுக்கு ரொம்பவும் கிலேசத்தை உண்டுபண்ணுகிறது. ஆகையாலடியில் எழுதப்பட்ட விஷயத்தை நன்றுய் விசாரம் செய்து பிரமாணவசனத்துடன் ஸித்தாந்தத்தை நமது ஆர்யதர்ம பத்திரிகை மூலமாக தெரியப்படுத்த வேணுமாய் தர்மஞர்களான நமது பண்டிதசிரேஷ்டர்களைப் பன்முறை நமஸ்கரித்து வேண்டுகிறேன்.

ஆபஸ்தம்பத்தில் பித்ருசிராத்தத்தில் ஹோமத்திற்குப்பிறகு ஹோமசேஷான்னத்தை அபிமர்சனத்திற்கு உசிதமான மந்திரத்தால் அபிமர்சனம் செய்துவருகிறோம். மாத்ரு சிராத்தத்திலும் இதே மந்திரத்தில் தத என்றவிடத்தில் ஊஹம் செய்து அபிமர்சனம் செய்கிறதா? அல்லது ஊஹம் செய்யவேண்டியதில்லையா.

॥ तथा च संग्रहकारः ॥

योज्यः पित्रादिशब्दानां स्थाने मातामहादिकः ।
अन्नाहुतौ तथा स्पर्शे जलपिण्डादिदानके ॥
यन्मे मातामहीत्यादि तत्रोदाहरणं भवेत् = इति ॥

स्पर्शे=एषते तत मधुमाँऊर्मिः इत्यादिभिरन्नस्पर्शे, मार्जयन्तामिति जलदाने, एतत्तेतत इति पिण्डदानेच पित्रादिशब्दस्थाने मातामहादि शब्दः ऊह्यइत्यर्थः ॥

என்ற வசனத்தில் எவர்களுக்கு ஹோமம் செய்யப்படுகிறதோ அவர்களைஉத்தேசித்து அபிமர்சனம் செய்யவேண்டும் என்று சொல்லியிருப்பதால் மாதிரு சிராத்தத்திலும் பித்ராதிகளுக்கே ஹோமம்செய்வதால் அன்னுபிமர்சனத்தில் மாத்ராதிசப்தங்களை ஊஹம் செய்வதற்கு நியாயமில்லைஎன்று சிலர் சொல்லுகிறார்கள். இந்தவிஷயத்தை ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கும்படி பணிந்து பிரார்த்திக்கிறேன்.

S. K. ராமகிருஷ்ணசாஸ்திரிகள் சிஷ்யன்,
சத்தியமங்கலம்.